# திருப்பாவை பிறந்த கதை

- மார்கழி மாதத்தை தேவருலகின் பிரம்ம முகூர்த்த காலம் என்பார்கள். அதாவது, தேவருலகில் அதிகாலை நேரத் தொடக்கம் என்பதாகும். எனவேதான், இப்பூவுலகில் ஆன்மிக மாதமான மார்கழியில், அதிகாலை நேரத்தில் எழுந்து, குளிர்ந்த நீரில் குளித்து ஆலயங்களுக்குச் சென்று வணங்கி, தமிழ் தோத்திரப் பாடல்களான திருப்பாவை, திருவெம்பாவை, திருப்பள்ளி எழுச்சி உள்ளிட்ட தமிழ் வேதங்களைப் பாடி, இறைவனைத் தொழுவது காலம் காலமாக இருந்து வரும் பண்பாடு ஆகும்.

- ஸ்ரீவில்லிப்புத்தூரில் பிறந்தவள் ஆண்டாள். மனிதர்கள் யாரையும் மணக்கமாட்டேன், பெருமாளைதான் மணப்பேன் என சபதம் கொண்டாள். கிருஷ்ணாவதார காலத்தில், ஆயர்பாடி கோபியர்கள் கண்ணனை அடைய மேற்கொண்ட பாவை நோன்பை மேற்கொண்டாள், ஆண்டாள்.

- ஸ்ரீவில்லிப்புத்தூரில் இருந்த பெருமாளின் சன்னதிக்கு சென்று, அவருடைய முகத்தைப் பார்க்க வெட்கப்பட்டு, கையில் இருந்த பாஞ்சஜன்யம் என்னும் சங்கைப் பார்த்து மார்கழி திங்கள் மதிநிறைந்த நன்னாளால் எனத் துவங்கி வங்கக்கடல் கடைந்த மாதவனை கேசவனை என முடியும் முப்பது பாடல்கள் பாடினாள். திரு என்றால் மரியாதைக்குரிய எனப் பொருள். பாவை என்றால் பெண். நமது வணக்கத்துக்குரிய பெண் தெய்வமாகிய ஆண்டாள் பெருமாளை பற்றி பாடியதால் இது திருப்பாவை ஆயிற்று.

- முதல் பாடல் திருப்பாவையின் நோக்கத்தை சுருக்கமாக எடுத்துச் சொல்கிறது. இரண்டு முதல் ஐந்து பாடல்கள் பாற்கடலில் பள்ளிகொள்ளும் பரந்தாமனின் சிறப்புகளையும், ஆறு முதல் 15 பாடல்கள் ஆழ்வார்களுக்கு ஒப்பான அடியார்களை தோழிகளாக கற்பனை செய்து அவர்களை எழுப்பிக்கொண்டு கோவிலுக்கு செல்வதை எடுத்துச் சொல்கிறது. கடைசி 15 பாடல்கள் தன்னை ஏற்றுக் கொள்ளுமாறு பெருமாளைக் கெஞ்சும் ஆண்டாளின் மனநிலையை உணர்த்துகிறது. திருப்பாவை வைணவர்களால் பெரிதும் போற்றப்படுகிறது.

- இது பாகவத வரலாற்றை ஒட்டி வருவது. கண்ணனை நாயகனாகப் பெறவேண்டும் என்ற வேட்கையும், நாடு செழிக்க மழை வேண்டும் என்ற விழைவும், ஆக்கள் விருத்தியடைய வேண்டும் என்ற விருப்பமும் தன்னகத்தே கொண்டது இந்நூல்.

# திருப்பாவை சிறப்பு

- உலகில் மட்டுமின்றி இலக்கிய வகையிலும் திருப்பாவை தனக்கென ஒரு தனி தகுதியை பெற்றுள்ளது. திருப்பாவை பனிரெண்டு ஆழ்வார்களில் ஒருவரான ஆண்டாள் பாடிய நூல் ஆகும். இது 30 பாடல்களால் ஆனது.

- ஒவ்வொரு பாசுரத்தை கொண்டே எல்லா பொருள்களையும் அறியலாம் என்பர். ஒரு பெரிய காட்சியினை மற்றும் தோற்றத்தினை - ஒரு சிறிய கண்ணாடி காட்டிவிடுவதை போல திருப்பாவையில் முதற்பாட்டே பல உண்மைகளை உணர்த்துகின்றது.

- ஆண்டாள் அருளிய பாசுரங்களை திருப்பாவை என்று அழைக்கின்றோம். ஆனால், ஆண்டாள் அதற்கு சூட்டிய பெயர் சங்கத் தமிழ் மாலை முப்பது என்பதாகும்.

- மாதவனாகிய எம்பெருமானுக்கு உகந்த மார்கழி மாதத்தில் காலை நேரத்தில் அனைத்து பெருமாள் கோவில்களிலும் இசைக்கப்படுவதே திருப்பாவையின் பெரும் சிறப்பாகும்.

- எங்கெல்லாம் பெருமானின் திருக்கோவில்கள் உள்ளதோ அங்கெல்லாம், ஆண்டாள் தனக்கும் ஒரு தனிச் சந்நதி கொண்டுள்ளார்.

- ஒரே அடிகொண்டு உலகையே அளந்த பரந்தாமனின் புகழைப் பாடுவதனாலேயே புவியில் வாழும் மக்கள் தமது துன்பம் நீங்கி இன்புற்றிருக்க இயலும் என இப்பாடலின் மூலம் ஆண்டாள் நமக்கு கூறுகிறார்.

## திருப்பாவை பாடல் 1

மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்
நீராடப் போதுவீர் போதுமினோ நேரிழையீர்!
சீர்மல்கும் ஆய்ப்பாடி செல்வச்சிறுமீர்காள்
கூர்வேல் கொடுந்தொழிலன் நந்தகோபன் குமரன்
ஏரார்ந்த கண்ணி யசோதை இளஞ்சிங்கம்
கார்மேனிச் செங்கண் கதிர்மதியம் போல் முகத்தான்
நாராயணனே நமக்கே பறை தருவான்
பாரோர் புகழப் படிந்தேலோர் எம்பாவாய்!

### பொருள் :

இனிதே துவங்கி இருக்கின்ற மார்கழி மாதத்தில் முழு நிலவு ஒளி வீச துவங்கிவிட்டது. பல வளங்கள் நிறைந்த ஆயர்பாடியில் வசிக்கும் எழில்மிகு மங்கையர்களே! வேலைப்பாடுகள் நிறைந்த அணிகலன்களை சூடிய கன்னியர்களே! எழுந்திருங்கள். நம்மை பாதுகாக்கும் அரிய தொழிலை செய்பவரும், கரங்களில் கூறிய வேலினை ஏந்திய நந்தகோபன் மற்றும் அழகிய விழிகளை உடைய யசோதாபிராட்டியாரின் வீரம் நிறைந்த சிங்கம் போன்ற கம்பீரமான தோற்றம் கொண்ட அவர்களுடைய புதல்வனும், கார்முகில் நிறங்களை உடையவனும், சேய் நிற விழிகளை கொண்டவனும், ஆதவனை போன்ற பிரகாசமான ஒளிகளை உடைய திருமுகத்திற்கு சொந்தக்காரரும், நாராயணனின் அம்சமுமாக இருக்கக்கூடிய கண்ணபிரான் நமக்கு அருள்புரிவதற்காக காத்துக்கொண்டு இருக்கிறார். அவரை போற்றி புகழ்ந்தால் இவ்வையோர் யாவும் நம்மை வாழ்த்தும்.

# திருப்பாவை பாடல் 02

வையத்து வாழ்வீர்காள்! நாமும் நம் பாவைக்குச்
செய்யும் கிரிசைகள் கேளீரோ பாற்கடலுள்
பையத்துயின்ற பரமன் அடிபாடி
நெய்யுண்ணோம் பாலுண்ணோம் நாட்காலே நீராடி
மையிட்டு எழுதோம் மலரிட்டு நாம் முடியோம்
செய்யாதன செய்யோம் தீக்குறளை சென்றோதோம்
ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி
உய்யுமா றெண்ணி உகந்தேலோர் எம்பாவாய்.

## பொருள் :

- பாவை நோன்பு மேற்கொள்பவர்களுக்கு ஆண்டாள் இப்பாடலில் சில கோட்பாடுகளை கூறுகின்றாள். நோன்பு மேற்கொள்ளும் பொழுது நாம் தவிர்க்க வேண்டிய உணவு பொருட்கள் பற்றியும், செய்ய வேண்டிய செயல்பாடுகள் பற்றியும் இப்பாடலில் தெரிவிக்கின்றாள்.

- இந்த உலக மாயையில் இருந்து விடுபட்டு பரந்தாமனின் உலகத்தை அடைய நாம் மேற்கொள்ளும் இந்த பாவை நோன்புகளில் முதலில் அதிகாலையில் எழுந்து நீராடுவதும், பரமனின் நாமங்களை பாடுவதும், நெய் உண்ணாமல், பால் அருந்தாமல் விழிகளிலே மை இட்டு அழகுப்படுத்தி கொள்ளாமல், கூந்தல்களில் மலர்களை சூடாமல் மற்றவர்களை பற்றி புறம் பேசுவதோ, குறை கூறுவதோ இன்றி இயன்ற அளவிற்கு ஏழை எளிய மக்களுக்கு தான, தர்மம் செய்ய வேண்டும்.

# திருப்பாவை பாடல் 03

ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி
நாங்கள் நம் பாவைக்குச் சாற்றி நீராடினால்
தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்து
ஓங்கு பெருஞ்செந்நெல் ஊடு கயலுகள
பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்ப
தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலை பற்றி
வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளல் பெரும்பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்தேலோர் எம்பாவாய்.

## பொருள் :

- சிறுவனாக சென்று மகாபலி மன்னனிடம் மூன்றடி மண்ணை பெற்று பின்பு விஸ்வரூபமெடுத்து மூன்று உலகங்களையும் தன்னுடைய திருப்பாதங்களால் அளந்த ஓங்கி உலகளந்த உத்தமனான வாமன அவதாரத்தை பற்றி இப்பாசுரத்தில் எடுத்துரைக்கின்றாள் ஆண்டாள்.

- பரமனை பற்றி போற்றி பாடி அதிகாலையில் எழுந்து நீராடி இவ்விரதத்தை இருப்பதினால் வையகத்தில் தீமைகள் எதுவும் நேராமல் மாதம் மும்முறை மழை நீர் இல்லாத இன்னல்களை குறைக்கும் என்றும், அதனால் வயல்வெளிகளில் நெல்மணிகள் நன்முறையில் வளரும் என்றும், மீன்கள் வயலுக்குள் ஊடுருவி துள்ளிக்குதித்து மகிழும் என்றும், குவளை மலர்களில் தேன் குடிக்க வந்த வண்டுகள் அளவுக்கு அதிகமான தேனை பருகி தன்னிலை மறந்து கிறங்கி கிடக்கும் என்றும், இல்லை என்று கூறாமல் பால் சுரக்கும் பசுக்கள் வற்றாத பாலையும், செல்வத்தையும் அளிக்கும் என்று கூறுகின்றாள் ஆண்டாள்.